**அக்டோபர் - 16**

**"அவர் கொந்தளிப்பை அமர்த்துகிறார்." - சங் 107 : 29**

இன்றையஉலகில் நாம் மானிட தீவிர உணர்ச்சிகள் எதிர்ப்புகள் முதலிய சீறுகிற சக்திகளின் மத்தியில் கர்த்தரின் விவகாரத்துக்கும், பிரதிநிதிகளாக நிற்கிறோம். நம்முடைய விசுவாசம் கர்த்தரின் கப்பலில் நம்மோடிருக்கிறதை பார்க்கக் கூடியதாயும், கர்த்தர் தமது உரிய சமயத்திலும் போக்கின் படியும், உலகுக்கு சமாதானம் கூற அவருக்கு இருக்கிற பலம் பொருந்திய வல்லமையை உணர்ந்துகொள்ளக் கூடியதாயிருந்தாலொழிய, சில வேளைகளில் நம்முடைய இருதயங்கள் பயமுறுத்தப்படும். ஆகிலும், ஒரு துக்கப்பாடுள்ள சமயம் நம்முன் இருக்குமானால், அநேகர் பயத்திலும், நடுக்கத்திலும் உரக்கத்தில் கூப்பிடத்தக்கதாக புயல் போன்ற காற்று அவ்வளவு அகோரமாய் இருக்கும் சமயம் வருமானால், அது நம்மைத் திடுக்கிடச் செய்யாது. நம்முடைய விசுவாசம் பிறகு நம்மைக் கைவிடாதபடிக்கும், மிகவும் துக்கபாடுள்ள சமயத்தில் நாம் பாடவும், நம்மை நேசித்ததின் சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே கிரயத்துக்குக் கொண்ட அவரில் சந்தோஷப்படக் கூடியவர்களாகும்படிக்கும், மோசேயின் பாட்டையும், ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடும்படிக்கும், இக்காலத்துக்குரிய அருமையான அனுபவங்கள் நன்றாகக் கற்றுக் கொள்ளுவோமாக.
**- Z ’04, 60 (R 3324)**

மனிதருடைய அனுபவத்தில் அநேக உருவகமான கொந்தளிப்புகள் இருந்திருக்கின்றன. தீமையோடுள்ள மனுக்குலத்தின் அனுபவமும், மூப்பராகிய விசுவாசிகள், வாலிபராகிய விசுவாசிகள், இஸ்ரவேலர், சிறுமந்தை வகுப்பார், திரள் கூட்டத்தார் ஆகிய இவர்களுடைய பாடுகளும் அவைகளில் அடங்கியிருக்கின்றன. இவைகள் எல்லாவற்றிற்கும் பிறகு கர்த்தர் கொந்தளிப்பை அமர்த்தியிருக்கிறார். இன்னமும் அமர்த்துவார். இந்த மூலவாக்கியத்தின் கொந்தளிப்பு முக்கியமாக, மகா உபத்திரவக் காலத்தின் இணையற்ற துன்பங்களைக் குறிக்கிறது.மனுஷருடைய சங்கங்கள், கழகங்கள், இந்தக் கொந்தளிப்பில் முற்றிலுமாக மோதி உடைந்துபோய் மாலுமிகள், அதிகாரிகள், பிரயாணிகள் இவர்களில் அநேகம்பேர் அராஜகத்தின் அலைகளுக்கடியில் மூழ்கிப் போவார்கள். இதற்குப் பிறகு ஆயிரமாண்டு அடைக்கல ஸ்தானத்தில் கொந்தளிப்பிற்குப் பிறகு ஏற்படப்போகிற அமைத்தலில் எல்லோரும் சந்தோஷப்படுவார்கள். **- P ’30, 166.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**லேவி 26:6; 1இராஜா 19:11,12; யோபு 5:19; சங் 34:13; 107:21-28; தானி 12:1,2; ஓசி 2:18; நாகூ 1:12; செப் 3:8,9; லூக் 2:14; ஏசா 26:3; யோவா 14:27; 16:33; 1கொரி 10:13; எபி 12:11; 1பேது 5:10.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 163 (R 5695).**

**வினாக்கள் : தேவன் எவ்விதம் எனக்கு சமாதானத்தை அருளினார்? எனது செயல்பாடு எவ்விதம்? அதின் பலன் என்ன? இந்த வாரத்தில் நான் விசுவாசத்தை அப்பியாசித்தேனா? எப்படி? பலன்கள் எவை?**